**ஆகஸ்ட் – 10**

# TNPSC துளிகள்

- தெலுங்கானா காவல்துறையானது, நாடு தழுவிய ஆபரேஷன் முஸ்கான் XI என்ற முன்னெடுப்பின் கீழ் கடந்த மாதம் 7,600 குழந்தைகளை மீட்டது.
- 500 கிலோவாட் திறன் கொண்ட மேற்கூரை சூரிய சக்தி அமைப்புடன் முழுமையாக சூரிய சக்தியில் இயங்கும் இந்தியாவின் முதல் சட்டமன்றமாக டெல்லி சட்டமன்றம் மாறியுள்ளது.
- JEE, NEET மற்றும் CAT போன்ற போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்காக பாலக்காட்டில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது, இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் கற்றல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தேசிய பசுமை ஹைட்ரஜன் உற்பத்தித் திட்டத்தின், SIGHT திட்டத்தின் கீழ் முதன் முதலில் நடத்தப்பட்ட ஏலத்தில், பசுமை அம்மோனியா ஒரு கிலோவிற்கு 55.75 ரூபாய் என்ற மிகக் குறைந்த விலையை இந்திய சூரிய ஆற்றல் கழகம் (SECI) பெற்றுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


## உங்களுடன் ஸ்டாலின் திட்டம்




- தமிழ்நாடு அரசின் மக்கள் தொடர்புத் திட்டத்திற்கு 'உங்களுடன் ஸ்டாலின்' என்று பெயரிடுவதற்கு எதிரான மனுவை 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 06 ஆம் தேதியன்று இந்திய உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.
- இந்த மனுவை தவறான கருத்தாக்கம் மற்றும் சட்டத்தின் துஷ்பிரயோகம் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.
- இந்த மனுவிற்காக சி. வி. சண்முகத்திற்கு 10 லட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டதோடு இந்த அபராதம் ஆனது தமிழக அரசின் நலத்திட்டங்களின் பயன்பாட்டிற்கு கொடுக்கப் பட வேண்டும்.
- தமிழக அரசுத் திட்டங்களுக்கு உயிருடன் உள்ள நபர்களின் பெயரை வைப்பதைத் தடுத்த சென்னை உயர் நீதிமன்ற உத்தரவை உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.
- ஆளும் கட்சி மற்றும் அதன் முதலமைச்சரின் மீது மட்டும் கட்டுப்பாடு விதிப்பது அரசியல் நோக்கத்தைக் காட்டுகிறது என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது.
- அரசியல் தலைவர்களின் பெயர்களைத் திட்டங்களுக்குச் சூட்டுவது என்பது இந்தியா முழுவதும் ஒரு பொதுவான நடைமுறை என்று நீதிமன்றம் கூறியது.

- பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிற உயிருடன் உள்ள தலைவர்களின் பெயர்களைக் கொண்ட திட்டங்களை மனுதாரர் எதிர்க்கவில்லை.
- 1968 ஆம் ஆண்டின் தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீடு மற்றும் வழங்கீட்டு ஆணையின் 16A பத்தியின் கீழ் இந்திய தேர்தல் ஆணையத்திடம் நடவடிக்கை எடுக்கவும் அம்மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.
- ஸ்டாலின் என்ற பெயரைப் பயன்படுத்துவதற்கு எதிராக அரசு விளம்பரத்தில் உள்ளடக்க ஒழுங்குமுறைக் குழுவின் தலையீட்டை மேற்கொள்ள மனு கோரியது.
- 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற பொதுநலத் திட்டம் குடிமக்களை மையமாகக் கொண்டது என்றும், அரசியல் பிரச்சாரத்திற்காக அல்ல என்றும் உச்ச நீதிமன்றம் முடிவு செய்தது.
- இந்தத் தீர்ப்பு, தமிழ்நாடு அரசு தனது நலத்திட்டங்களுக்கு 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற பெயரைத் தொடர்ந்து பயன்படுத்த அனுமதிக்கிறது.

## மெட்ராஸ் பயால் பள்ளிகளில் (திண்ணைப் பள்ளி) சமூகப் பிரிவினை




- 1871 ஆம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்தின் கல்விசார்க் கணக்கெடுப்பு, பயால் பள்ளிகளில் தீவிரமான சாதி மற்றும் வர்க்கப் பிரிவுகள் இருந்ததை எடுத்துக் காட்டுகிறது.
- உயர்சாதிக் குழந்தைகள் பல மதச் சடங்குகள் மற்றும் பிராமண ஆசிரியர்களுக்கு பரிசுகளுடன் விரிவான சேர்க்கை விதிகளை/சடங்குகளைக் கொண்டிருந்தனர்.
- செல்வ வளம் மிக்க பகுதிகளில் உள்ள ஆசிரியர்கள் மாணவர் எண்ணிக்கை மற்றும் பரிசுகளின் அடிப்படையில் மாதந்தோறும் ஐந்து முதல் இருபத்தைந்து ரூபாய் வரை சம்பாதித்தனர்.
- ஏழைக் குழந்தைகளுக்கு சேர்க்கைச் சடங்குகள் என எதுவும் இல்லை, எழுத்துக்களைக் கற்றுக் கொண்ட பிறகு தான் ஒன்று முதல் இரண்டு அணா வரை செலுத்தினர்.
- ஏழ்மை நிலையில் இருந்த பகுதிகளில் அமைந்த பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் குறைந்தபட்சக் கட்டணம் மற்றும் பரிசுகளிலிருந்து மாதத்திற்கு ஐந்து முதல் பத்து ரூபாய் வரை சம்பாதித்தனர்.

- முஸ்லிம் பள்ளிகளில் மாதாந்திரக் கட்டணம் எதுவும் வசூலிக்கவில்லை என்பதோடு, ஆசிரியர்கள் பாடங்களைக் கற்பித்தல் மற்றும் பண்டிகைகளின் போது தன்னார்வ அடிப்படையில் வழங்கப் பட்ட பரிசுகளை மட்டுமே சார்ந்திருந்தனர்.
- "பயால்" என்ற சொல் சூழலைப் பொறுத்து வெவ்வேறு விஷயங்களைக் குறிக்கலாம்.
- இது பொதுவாக இந்திய வீடுகளில் பொதுவாகக் காணப்படும் ஒரு உயர்த்தப்பட்ட மேடை அல்லது வராண்டாவைக் குறிக்கிறது.

### 'மாபெரும் தமிழ் கனவு'

- ஆகஸ்ட் 06 ஆம் தேதியன்று, தமிழக முதல்வர் இந்த முன்னெடுப்பின் மூன்றாம் கட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தக் கட்டம் ஆனது, மாநிலம் முழுவதும் உள்ள இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் 200 கல்லூரிகளுக்கு பயனளிக்கும் நோக்கில் அமைக்கப்பட்டது.
- பண்டைய தமிழ் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் வரலாறு குறித்து இளைஞர்களுக்கு கற்பிப்பதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டது.
- இது சமத்துவச் சமூகத்தின் முக்கியத்துவம் மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்தும் கவனம் செலுத்தியது.





## தேசியச் செய்திகள்

### Haat on Wheels முன்னெடுப்பு

- ஜவுளி அமைச்சகம் மற்றும் தேசியக் கைத்தறி மேம்பாட்டுக் கழகம் (NHDC) ஆகியவை 11வது தேசிய கைத்தறி தினத்தை புது டெல்லியில் கொண்டாடியது.
- பிரத்தியேகக் கைத்தறி கண்காட்சி மற்றும் "Haat on Wheels" என்ற நடமாடும் சில்லறை விற்பனை முன்னெடுப்பு ஆகியவை ஜன்பத் பகுதியில் தொடங்கப்பட்டது.
- பல்வேறு இடங்களில் உள்ள நுகர்வோருக்குப் கைத்தறிப் பொருட்களை நேரடியாகக் கொண்டு செல்வதன் மூலம் அவற்றின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- "Haat on Wheels" இந்தியாவின் பாரம்பரிய நெசவு நடைமுறைகளைப் பாதுகாப்பதிலும், ஊக்குவிப்பதிலும் உதவுகிறது.




## வனசக்தி மற்றும் இந்திய ஒன்றியம் இடையிலான வழக்கு

- முன் தேதியிட்ட சுற்றுச்சூழல் அனுமதிகளை அனுமதித்த 2017 ஆம் ஆண்டு அறிவிப்பு மற்றும் 2021 ஆம் ஆண்டு அலுவலகக் குறிப்பாணையை இந்திய உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.
- 2006 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) அறிவிப்பின் கீழான சுற்றுச்சூழல் அனுமதிகள் (EC) திட்டம் தொடங்குவதற்கு முன்பு பெறப்பட வேண்டும்.
- ரத்து செய்யப்பட்ட 2017 ஆம் ஆண்டு அறிவிப்பு முன் EC இல்லாமல் தொடங்கிய திட்டங்களுக்கு ஒற்றை முறை பொது மன்னிப்பு / தீர்வு வழங்குவதை அறிமுகப் படுத்தியது.
- 2021 ஆம் ஆண்டு அலுவலகக் குறிப்பாணை, முன் தேதியிடப்பட்ட ஒப்புதல்களை வழங்குவதற்கான நடைமுறைக் கட்டமைப்பை வழங்கியது.
- முன் தேதியிடப்பட்ட ஒப்புதல்கள் முன்னெச்சரிக்கை கொள்கை மற்றும் சுற்றுச்சூழல் சட்ட விதியை மீறுவதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது.
- 2021 ஆம் ஆண்டு அலுவலகக் குறிப்பாணை சட்டப்பூர்வ அதிகாரம் இல்லாத ஒரு ஒழுங்குமுறைக் கருவியாகக் கருதப்பட்டது.
- முன் தேதியிட்ட அனுமதிகள், விதி மீறல்களை ஊக்குவித்தன மற்றும் EIA கட்டமைப்பின் நேர்மையினை குறைமதிப்பிற்கு உட்படுத்தின.
- முன் கூட்டியே வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதிகளானது, ஒரு கணிசமான சட்டப் பாதுகாப்பு என்றும், வெறும் சம்பிரதாயம் அல்ல என்றும் நீதிமன்றம் கூறியது.
- தீர்ப்புக்கு முன்னர் வழங்கப்பட்ட, கடந்த கால முன் தேதியிட்ட அனுமதிகள் சட்ட உறுதித் தன்மையைப் பாதுகாப்பதற்கான செல்லுபடித் தன்மையினைக் கொண்டு உள்ளது.
- இந்தத் தீர்ப்புக்குப் பிறகு மேற்கொண்டு எந்தவொரு முன் தேதியிடப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதிகளை வழங்க முடியாது.
- EC இல்லாமல் தொடங்கப்பட்டு, தீர்ப்புக்கு முன் முறைப்படுத்தலுக்கு விண்ணப்பிக்காத திட்டங்கள் அமலாக்க நடவடிக்கைகளை எதிர்கொள்ளும்.
- அமலாக்க நடவடிக்கைகளில் காரணம் கேட்பு அறிக்கைகள், நிதி அபராதங்கள், மூடல்


அல்லது இடிப்பு உத்தரவுகள் ஆகியவை அடங்கும்.

❖ நிபுணர் மதிப்பீட்டுக் குழுக்கள் (EAC) மற்றும் மாநிலச் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகாரிகள் (SEIAAs) போன்ற ஒழுங்குமுறை அமைப்புகள் முன் தேதியிடப்பட்ட EC விண்ணப்பங்களைச் செயல்படுத்த முடியாது.

❖ நிலம் கையகப்படுத்துதல் மற்றும் கட்டுமானத்திற்கு முன், திட்ட உருவாக்குநர்கள் சுற்றுச்சூழல் அனுமதிகளைப் பெற வேண்டும் என்று இந்தத் தீர்ப்பு கோருகிறது.


❖ ஆரம்பகாலத் திட்டத் திட்டமிடல் மற்றும் ஒப்பந்தங்களில் சுற்றுச்சூழல் இணக்கத்தை ஒருங்கிணைப்பதை இது வலியுறுத்துகிறது.

❖ முதலீட்டாளர்கள் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை (ESG) ஆபத்து மதிப்பீடுகள் மற்றும் வெளிப்படுத்தல்களில் இந்தத் தீர்ப்பைக் கருத்தில் கொள்ள வேண்டும்.




# சர்வதேசச் செய்திகள்

## IEA இடையாண்டு மின்சார துறைத் தகவல் புதுப்பிப்பு 2025




❖ உலகளாவிய மின்சாரத் தேவையானது 2025 ஆம் ஆண்டில் 3.3% ஆகவும், 2026 ஆம் ஆண்டில் 3.7% ஆகவும் அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது என்பதோடு இது 2015–2023 ஆம் ஆண்டுகளின் 2.6% என்ற சராசரியை விட அதிகமாகும்.

❖ 2026 ஆம் ஆண்டில் உலகளாவிய மின்சாரத் தேவை அதிகரிப்பில் சீனா மற்றும் இந்தியா ஆகியவற்றின் பங்கு 60% ஆக இருக்கும்.

❖ அவற்றின் ஒருங்கிணைந்த உற்பத்தி 2026 ஆம் ஆண்டில் 6,000 TWh அளவினைத் தாண்டும் என்பதுடன் காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்னழுத்த (PV) ஆற்றல், 2025

ஆம் ஆண்டில் 90 சதவீதத்திற்கும் அதிகமான தேவை அதிகரிப்பினைப் பூர்த்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சீனா மற்றும் இந்தியாவில் நிலக்கரி சார்ந்த மின் உற்பத்தி குறைந்துள்ளது, ஆனால் எரிபொருள் மாற்றம் காரணமாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இது அதிகரித்துள்ளது.
- உலகளாவிய மின்சாரத் துறையின் $CO_2$ உமிழ்வு ஆனது 2025 ஆம் ஆண்டில் ஒரு நிலையான மட்டத்திற்குச் செல்லும் என்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளர்ச்சி காரணமாக 2026 ஆம் ஆண்டில் அது சற்று குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.
- அணு மின் உற்பத்தியானது, 2025 ஆம் ஆண்டில் சாதனை அளவிலான உச்சத்தை எட்டும் பாதையில் உள்ளது.
- எரிவாயு விலைகள் அதிகரித்ததன் காரணமாக 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் மொத்த மின்சார விலைகள் 30–40% உயர்ந்தன, அதே நேரத்தில் ஜெர்மனி மற்றும் ஸ்பெயினில் எதிர்மறையாக விலை மதிப்பு அதிகரித்தது.

## இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளின் உத்திசார் கூட்டாண்மை




- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 ஆம் தேதியன்று, பிலிப்பைன்ஸ் அதிபர் ஃபெர்டினாண்ட் R. மார்கோஸ் ஜூனியரின் இந்தியாவிற்கான அரசு முறை பயணத்தின் போது இந்தியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகள் ஓர் உத்திசார் கூட்டாண்மையை மேற் கொண்டன.
- கூட்டாண்மையை வழிநடத்துவதற்காக என 2025 ஆம் ஆண்டு முதல் 2029 ஆம் ஆண்டு வரையிலான விரிவான செயல் திட்டம் குறிப்பிட்டுக் காட்டப்பட்டது.
- இந்தக் கூட்டாண்மையானது, 75 ஆண்டுகால அரசுமுறை உறவுகள் மற்றும் 1952 நட்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளது.
- இந்தக் கூட்டாண்மை ஆனது அரசியல், பாதுகாப்பு, காவல், கடல்சார் நடவடிக்கை, வர்த்தகம், முதலீடு, அறிவியல், தொழில்நுட்பம், சுகாதாரம், வேளாண்மை, எண்ணிமத் தொழில்நுட்பங்கள், கலாச்சாரம், சுற்றுலா மற்றும் மக்களிடையேயான பல்வேறு பரிமாற்றங்களை உள்ளடக்கும்.
- இரு நாடுகளும் சர்வதேச சட்டத்தைக் கடைபிடிக்கும் வகையில் சுதந்திரமான, திறந்த தடையற்ற விதிகள் சார்ந்த இந்திய-பசிபிக் பிராந்தியத்தை ஆதரிக்கின்றன என்ற நிலையில் இதில் 1982 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் கடல் சட்டம் தொடர்பான ஒரு

உடன்படிக்கையும் அடங்கும்.

❖ பொருளாதாரம் சார்ந்த கவனமானது, 2024-25 ஆம் ஆண்டில் 3.3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிப்பது மற்றும் முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வது ஆகியவை அடங்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அல்பைன் கஸ்தூரி மான் வளங்காப்பு அறிக்கையில் பிழை




❖ மத்திய உயிரியல் பூங்கா ஆணையத்தின் (CZA) அறிக்கையானது, இந்திய உயிரியல் பூங்கா இனப்பெருக்கத் திட்டங்களில் அல்பைன் கஸ்தூரி மான் (மோஸ்கஸ் கிரிசோகாஸ்டர்) தவறாக அடையாளம் காணப் பட்டதை வெளிப்படுத்தியது.

❖ உத்தரகாண்ட் மற்றும் மேற்கு வங்காளத்தில் உள்ள உயிரியல் பூங்காக்கள் இமயமலை கஸ்தூரி மானைத் (மோஸ்கஸ் லுகோகாஸ்டர்) தவறான முறையில் இனப்பெருக்கம் செய்தன.

❖ அல்பைன் கஸ்தூரி மான் அதன் 2014 ஆம் ஆண்டு கணக்கீட்டில் IUCN அமைப்பினால் மிகவும் அருகி வரும் நிலையில் உள்ள இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

❖ எந்த இந்திய உயிரியல் பூங்காவிலும் தற்போது காப்பு நிலையிலான அல்பைன் கஸ்தூரி மான்கள் காணப்படுவதில்லை.

❖ 1980 ஆம் ஆண்டுகளில் இருந்து, காடுகளில் அல்பைன் கஸ்தூரி மான்களின் சமீபத்திய எண்ணிக்கை மதிப்பீடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

❖ 2006 ஆம் ஆண்டு மற்றும் 2021 ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இனப் பெருக்கத் திட்டங்களுக்காக இந்திய உயிரியல் பூங்காக்களுக்கு மொத்தம் 28.94 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

## அஷ்டமுடி ஈரநில மேலாண்மை

❖ கேரள உயர் நீதிமன்றமானது, அறிவிப்பு வெளியான இரண்டு மாதங்களுக்குள் அஷ்டமுடி ஈரநில மேலாண்மை அலகை உருவாக்குமாறு மாநில அரசுக்கும், கேரள மாநில ஈரநில ஆணையத்திற்கும் (SWAK) உத்தரவிட்டது.

- அஷ்டமுடி ஈரநிலத்திற்கான தளம் சார்ந்த ஒருங்கிணைந்த மேலாண்மை திட்டத்தினை ஆறு மாதங்களுக்குள் முடிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.
- அஷ்டமுடி ஏரியானது கேரளாவின் இரண்டாவது பெரிய ஈரநிலமாகும், மேலும் இது 2002 ஆம் ஆண்டில் சர்வதேச ராம்சர் உடன்படிக்கையின் கீழ் ராம்சர் தளமாக நியமிக்கப் பட்டது.
- இந்த ஈரநிலத்தின் பரப்பளவு 61.40 சதுர கிலோமீட்டரிலிருந்து 34 சதுர கிலோமீட்டராக குறைந்துள்ளதோடு, அதிக மாசுபாடு மற்றும் வண்டல் படிவையும் எதிர்கொள்கிறது.
- 2023 ஆம் ஆண்டில், தேசியப் பசுமைத் தீர்ப்பாயம் (NGT) ஆனது அஷ்டமுடி ஏரி மற்றும் பிற ஈரநிலங்களைப் பாதுகாக்கத் தவறியதற்காக மாநில அரசுக்கு 10 கோடி ரூபாய் அபராதம் விதித்தது.
- செயல்பாடுகளுக்கான நீடித்த நிலையான நடைமுறைகளை உருவாக்கவும், வலை தளம் அல்லது சமூக ஊடகங்கள் மூலம் பொது கருத்துரைப்பு அமைப்பைப் பேணவும் நீதிமன்றம் அந்தப் பிரிவுக்கு உத்தரவிட்டது.




# மாநிலச் செய்திகள்

## சிறார் நீதிக்கான சைகை மொழி நிபுணர்கள்

- 2015 ஆம் ஆண்டு சிறார் நீதிச் சட்டத்தின் கீழ் சைகை மொழி மொழிபெயர்ப்பாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் சிறப்புக் கல்வியாளர்களை நியமித்த இந்தியாவின் முதல் மாநிலமாக பஞ்சாப் மாறியுள்ளது.
- செவிப்புலன் மற்றும் பேச்சு குறைபாடுள்ள குழந்தைகளுக்கு அணுகக்கூடிய மற்றும் உணர்திறன் சார்ந்த நீதியை உறுதி செய்வதை இந்த நடவடிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நீதிமன்ற நடவடிக்கைகள் மற்றும் பிற அதிகாரப்பூர்வ விவகாரங்களின் போது தேவைப்படும் குழந்தைகளுக்கு ஆதரவு சேவைகளை வழங்க மாவட்டம் வாரியாக நிபுணர்கள் பணியமர்த்தப்படுவார்கள்.
- இந்த முன்னெடுப்பானது, 2012 ஆம் ஆண்டு பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் (POCSO) சட்டத்துடன் ஒத்துப்போகிறது மற்றும் மிகவும் நியாயமான மற்றும் உணர்திறன் சார்ந்த விளைவுகளை ஊக்குவிக்கிறது.

- நிபுணர்களுக்கு சட்ட விதிகளின்படி தொகை வழங்கப்படும் மற்றும் சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தைகள் சம்பந்தப்பட்ட வழக்கமான மற்றும் அவசர வழக்குகளில் அவர்கள் உதவுவார்கள்.
- பஞ்சாப் முன்பு அதன் உள்ளடக்கிய நிர்வாக முன்னெடுப்புகளின் ஒரு பகுதியாக, சைகை மொழியில் அதன் விதான் சபா நடவடிக்கைகளை ஒளிபரப்பியுள்ளது.

**Punjab to Empanel Sign Language Experts for Inclusive Justice**

*** Punjab becomes the first state to empanel sign language interpreters, translators, and special educators under the Juvenile Justice Act, 2015.**

*** The move will also apply to cases under the POCSO Act, 2012.**

*** Aim is to bridge communication gaps for children with speech or hearing impairments.**

*** Seeks to improve access to justice for differently-abled children.**

## இதரச் செய்திகள்

### சாரநாத் - யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய தள பரிந்துரை



**Sarnath Nominated for UNESCO World Heritage**

- 2025-26 ஆம் ஆண்டு தளப் பரிந்துரை சுழற்சிக்காக இந்த ஆண்டு 'பண்டைய பௌத்தத் தளம் - சாரநாத்' என்ற தலைப்பிலான ஆவணத்தை யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய மையத்திடம் இந்தியா சமர்ப்பித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு செயல்பாட்டு வழிகாட்டுதல்களின் படி, எந்தவொரு பரிந்துரை சுழற்சியிலும் தளச் சேர்ப்புச் செயல்முறைக்கு ஒரு தளத்தினை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.
- 1998 ஆம் ஆண்டிலிருந்து யுனெஸ்கோவின் "தற்காலிகப் பட்டியலில்" சாரநாத் உள்ளது.
- சாரநாத், உத்தரப் பிரதேசத்தின் வாரணாசிக்கு அருகில் அமைந்துள்ளது.

- இது கௌதம புத்தர் ஞானம் பெற்ற பிறகு தனது முதல் பிரசங்கத்தை (தம்மசக்கர பரிவட்டனா) நிகழ்த்தியதாகக் கூறப்படும் ஒரு முக்கிய பௌத்த யாத்திரைத் தலமாகும்.
- இது ரிஷிபதானம், மிருகதவா மற்றும் மிருகதயா போன்ற பெயர்களிலும் அழைக்கப் படுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★